**ஜூலை – 06**

# TNPSC துளிகள்


- சுவிட்சர்லாந்தின் லூசெர்ன் நகரில் நடைபெற்ற உலக துடுப்புப் படகுப் போட்டியின் ஆடவருக்கான இலகுரக இரட்டையர் துடுப்புப் படகுப் பிரிவில் (LM2x) இந்திய ராணுவ வீரர்களான ஹவில்தார் லக்ஷய் மற்றும் உஜ்வால் குமார் சிங் ஆகியோர் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்றனர்.
- இந்திய விமானப்படை (IAF) 5-வது போர் மற்றும் விண்வெளி வியூகத் திட்டத்தை (WASP) 2026 ஆம் ஆண்டு ஜூன் 29 அன்று புது தில்லியில் நிறைவு செய்தது.
    - இத்திட்டம் இடைநிலை அதிகாரிகளுக்காக 2022-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு தொழில்முறை இராணுவக் கல்வி (PME) முன்னெடுப்பாகும்.
- அமெரிக்காவால் ஹவாயில் நடத்தப்படும் உலகின் மிகப்பெரிய பன்னாட்டுக் கடற் படைப் பயிற்சியான 'ரிம்பேக்' 2026-இன் (RIMPAC 2026) 30-வது பதிப்பில் இந்திய ஆயுதப் படைகள் பங்கேற்றன.
- ஈதன் வாஸ் மற்றும் ஹர்ஷவர்தன் ஜி.பி. ஆகியோர் இந்தியாவின் புதிய செஸ் கிராண்ட்மாஸ்டர்களாக (GM) அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் இந்தியாவின் 96-வது மற்றும் 97-வது கிராண்ட்மாஸ்டர்களாக மாறினர்.
- இந்தியாவின் டிஜிட்டல் சுகாதார சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் (ABDM) கீழ் ஒருங்கிணைந்த சுகாதார இடைமுகத்தை (UHI) தேசிய சுகாதார ஆணையம் (NHA) விரிவுபடுத்துகிறது.
    - ஒருங்கிணைந்த சுகாதார இடைமுகம் (UHI) என்பது பல்வேறு டிஜிட்டல் சுகாதாரப் பயன்பாடுகள் மூலம் நோயாளிகளை சுகாதார சேவை வழங்குநர்களுடன் இணைக்கும் ஒரு திறந்த நெறிமுறையாகும்.
- விளையாட்டுச் செய்தியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், ஒளிபரப்பாளர்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 2 அன்று உலக விளையாட்டுச் செய்தியாளர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு Championing Fair Play: Reporting with Integrity and Impact என்பதாகும்.
- நிலையான வளர்ச்சி மற்றும் சமூக நலனில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 5 அன்று சர்வதேச கூட்டுறவு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு Cooperatives for a Peaceful World என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## துறைமுகப் பாதுகாப்புப் பணியகம்

- 2026-ஆம் ஆண்டில் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் துறைமுகப் பாதுகாப்புப் பணியகத்தை (BoPS) இந்திய அரசு நிறுவியுள்ளது.
- இந்தியாவில் உள்ள கப்பல்கள், துறைமுகங்கள் மற்றும் அவை தொடர்பான உள் கட்டமைப்புகளின் பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்காக BoPS உருவாக்கப் பட்டு உள்ளது.

- இது சிவில் விமானப் பாதுகாப்புப் பணியகத்தின் (BCAS) மாதிரியில் உருவாக்கப் பட்டு உள்ளது.
- இது கடல்சார் பாதுகாப்பு மற்றும் இணையவழிப் பாதுகாப்புக்கான உச்ச அதிகார அமைப்பாகச் செயல்படும்.
- மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையானது (CISF) துறைமுகங்களுக்கான அங்கீகரிக்கப் பட்ட பாதுகாப்பு அமைப்பாக (RSO) நியமிக்கப்பட்டுள்ளது.
- BoPS ஆனது துறைமுகப் பாதுகாப்பு, கப்பல் பாதுகாப்பு, உளவுத் தகவல்களைப் பகிர்தல் மற்றும் இணைய அச்சுறுத்தல் தடுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- இந்தியாவின் கடல்சார் துறையில் கண்காணிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஜப்பான் உச்சிமாநாடு


- இரு நாடுகளுக்கும் இடையிலான சிறப்பு உத்திசார் மற்றும் உலகளாவிய கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்காக 16-வது இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு புது தில்லியில் நடைபெற்றது.
- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவை தங்கள் முதல் கூட்டுப் பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டமான UNICORN (ஒருங்கிணைந்த கூட்டு ரேடியோ அலைவாங்கி) திட்டத்தில் உடன்பாடு கண்டதுடன், பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் கூட்டு ராணுவ ஒத்துழைப்பு ஆகியவற்றை விரிவுபடுத்தவும் முடிவு செய்தன.
- பொருளாதாரப் பாதுகாப்பு, தூய்மையான ஆற்றல், செயற்கை நுண்ணறிவு (AI), நெகிழ்ச்சியான விநியோகச் சங்கிலிகள் மற்றும் பசுமை ஹைட்ரஜன், உயிரிவாயு மற்றும் குறை கடத்திகள் ஆகியவற்றில் இரு நாடுகளும் ஒப்பந்தங்களை ஏற்றுக் கொண்டன.
- விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தின் (CEPA) மதிப்பாய்வை விரைவு படுத்தவும், இந்தியாவில் 10 டிரில்லியன் யென் மதிப்பிலான ஜப்பானிய முதலீட்டு இலக்கை நோக்கிப் பணியாற்றவும் அவை ஒப்புக் கொண்டன.
- சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் (FOIP), தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) மற்றும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (BIMSTEC) ஆகியவற்றிற்கான ஆதரவு, Quad, சுதந்திரமான கடல்வழிப் போக்குவரத்து மற்றும் ஐக்கிய நாடுகளின்

பாதுகாப்புச் சபை (UNSC) சீர்திருத்தங்கள் ஆகியவற்றிற்கான ஒத்துழைப்பை இரு நாடுகளும் மீண்டும் உறுதிப்படுத்தின.




# பொருளாதாரச் செய்திகள்

## RBI ஒருங்கிணைந்த குறைதீர்ப்பாயத் திட்டம் 2026




- ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களில் வாடிக்கையாளர்களின் குறைதீர்க்கும் முறையை வலுப்படுத்தவும் நெறிப்படுத்தவும், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 2021 ஆம் ஆண்டு கட்டமைப்பிற்குப் பதிலாக திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த குறைதீர்ப்பாயத் திட்டத்தை (RB-IOS) 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் செயல்படுத்தியுள்ளது.
- இத்திட்டமானது வங்கிகள், NBFCகள் (வங்கியல்லாத நிதி நிறுவனங்கள்), கட்டண முறைமை இயக்குநர்கள் மற்றும் கடன் தகவல் நிறுவனங்களுக்கு எதிரான புகார்களைத் தீர்ப்பதற்கு விரைவான, கட்டணமில்லா மற்றும் விரோதமற்ற பொறி முறையை வழங்குகிறது.
- இது "ஒரு நாடு, ஒரு குறைதீர்ப்பாயம்" என்ற அமைப்பைப் பின்பற்றுகிறது, இதனால் குறிப்பிட்ட மண்டல அலுவலகத்தை அடையாளப்படுத்தாமல் புகார்களை அளிக்க முடியும்.

- நிதி இழப்புக்கான இழப்பீட்டு வரம்பை ₹30 லட்சமாகவும், அலைக்கழிப்பு, தாமதம் மற்றும் மன உளைச்சலுக்கான இழப்பீட்டை ₹3 லட்சமாகவும் RBI உயர்த்தியுள்ளது.
- வாடிக்கையாளர்கள் முதலில் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்தை அணுக வேண்டும், 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படாவிட்டால் ரிசர்வ் வங்கியிடம் முறையிடலாம்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## PinS கருவி அணுகுமுறைச் செயல்முறை

- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள உண்டவல்லி ஹெலிபோர்ட்டில் ஹெலிகாப்டர் செயல் பாடுகளுக்கான இந்தியாவின் முதல் பிரத்தியேக பாயிண்ட்-இன்-ஸ்பேஸ் (PinS) கருவி அணுகுமுறைச் செயல்முறைக்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த செயல்முறையானது இந்திய விமான நிலைய ஆணையத்தால் (AAI) உருவாக்கப் பட்டு, சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தால் (DGCA) அங்கீகரிக்கப் பட்டு உள்ளது.
- செயற்கைக்கோள் அடிப்படையிலான கருவி அணுகுமுறைச் செயல்முறையான பாயிண்ட்-இன்-ஸ்பேஸ் (PinS) வழக்கமான கருவி தரையிறக்க அமைப்புகள் இல்லாமலேயே ஹெலிகாப்டர்கள் பாதுகாப்பாகவும் துல்லியமாகவும் தரையிறங்க உதவுகிறது.
- விமானப் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த இது செயல்திறன் அடிப்படையிலான வழிசெலுத்தல் (PBN) மற்றும் செயற்கைக்கோள் வழிசெலுத்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) மற்றும் DGCA விதிமுறைகளால் அமைக்கப்பட்ட தரநிலைகளை இந்த அமைப்பு பின்பற்றுகிறது.




## இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் அடிப்படையிலான தரையிறக்க சோதனை - ஏர்பஸ் A320

- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ககன் (GAGAN) வழிசெலுத்தல் அமைப்பைப் பயன்படுத்தி உதய்பூர் விமான நிலையத்தில் ஏர்பஸ் A320 விமானத்தில் இந்தியாவின்

முதல் செயற்கைக்கோள் அடிப்படையிலான தரையிறக்க அமைப்பு (SLS) அணுகு முறைச் சோதனையை சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மேற்கொண்டது.

- இந்தச் சோதனையானது, இண்டிகோ ஏர்பஸ் A320 விமானம் ஒன்று துல்லியமாகத் தரையிறங்குவதற்காக, செங்குத்து வழிகாட்டுதலுடன் கூடிய இடங்காட்டி செயல்திறன் (LPV) அணுகுமுறையை மேற்கொள்ள உதவியது.
- ககன் (GAGAN – GPS உதவியுடனான புவிசார் விரிவாக்கப்பட்ட வழிகாட்டுதல்) என்பது இந்தியாவின் செயற்கைக்கோள் அடிப்படையிலான மேம்படுத்தும் அமைப்பாகும் (SBAS).
- இது இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்டது.
- புவிநிலைச் செயற்கைக்கோள்கள் மூலம் திருத்தத் தரவை அனுப்புவதன் மூலம் GPS சமிக்ஞைகளின் துல்லியம், ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையை இது மேம்படுத்துகிறது.
- இந்த அமைப்பு தரை அடிப்படையிலான கருவி தரையிறக்க அமைப்புகளைச் (ILS) சார்ந்திருப்பதைக் குறைக்கிறது மற்றும் குறைந்த உள்கட்டமைப்பு உள்ள விமான நிலையங்களில் தரையிறங்கும் திறனை மேம்படுத்துகிறது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### சத்கோசியா புலிகள் காப்பகத்தில் புலிகள் மறுஅறிமுகம்

- ஒடிசாவில் உள்ள சத்கோசியா புலிகள் காப்பகத்தில் புலிகள் மறுஅறிமுகத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.
- சத்கோசியா புலிகள் காப்பகம் 523 சதுர கிலோமீட்டர் மையப் பகுதி உட்பட 1,136 சதுர

கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது என்பதுடன் மேலும் தற்போது இங்கு புலிகள் எதுவும் இல்லை.

- புலிகள் மறு அறிமுகம் என்பது, பொருத்தமான வாழ்விடம் மற்றும் இரை கிடைப்பதை உறுதிசெய்த பின்னர், புலிகள் குறைந்து போன அல்லது அவை அழிந்துபோன வாழ்விடங்களுக்கு அவற்றை இடமாற்றம் செய்வதை உள்ளடக்கியது.
- 2018-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மறு அறிமுகத் திட்டம், ஒரு புலி வேட்டைக் காரனின் வலையில் சிக்கி இறந்ததாலும், சுந்தரி என்ற பெண்புலி மனித-வனவிலங்கு மோதல் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்டதாலும் தோல்வியடைந்தது.
- இத்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு முன்பு, கிராமப்புற இடமாற்றம், இரைகளின் எண்ணிக்கையை மேம்படுத்துதல், மீற முடியாத பகுதிகளை உருவாக்குதல், ஊழியர்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் வலுவான பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) அறிவுறுத்தியுள்ளது.




## வன மகோத்சவம் 2026





- வன மகோத்சவம் 2026, இந்தியா முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் ஜூலை 7 வரை வருடாந்திர "காடுகளின் திருவிழாவாக" அனுசரிக்கப்படுகிறது.
- இது இந்தியாவின் ஒரு வாரம் நடைபெறும் மரம் நடும் திருவிழாவாகும். இதில்

பள்ளிகள், அரசு அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் பெருமளவிலான மரம் நடும் இயக்கங்களில் பங்கேற்கின்றனர்.

- மரம் வளர்ப்பு மற்றும் காடு வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக அப்போதைய மத்திய வேளாண்மை மற்றும் உணவுத் துறை அமைச்சரான கே.எம். முன்ஷி என்பவரால் 1950-ஆம் ஆண்டு இந்த விழா தொடங்கப்பட்டது.
- பருவமழையின் தொடக்கமானது புதிதாக நடப்படும் மரக்கன்றுகளின் உயிர்வாழும் விகிதத்தை அதிகரிப்பதன் காரணமாக இது ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில் கொண்டாடப் படுகிறது.
- வன மகோத்சவம் என்பது காடு வளர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நாடு முழுவதும் உள்ள சுற்றுச்சூழல் சமநிலை பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## சிவில் பதிவு முறைமை (CRS) 2024 பதிவு அறிக்கை




- சிவில் பதிவு முறைமை (CRS) 2024 அறிக்கையின்படி, 2024-ஆம் ஆண்டில் இந்தியாவில் 99.1% பிறப்புகளும் 99.4% இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- 2024-ஆம் ஆண்டில் மொத்தம் 254.7 லட்சம் பிறப்புகளும் 89.4 லட்சம் இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2023-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புள்ளிவிவரங்களை விட அதிகமாகும்.
- இந்தியாவில் பிறப்பு பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 917 பெண்களாக இருந்தது; இதில் அருணாச்சலப் பிரதேசம் (1,050) அதிகபட்சமாகவும், நாகாலாந்து (865) குறைந்த பட்சமாகவும் கொண்டதாக பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது 2024-ஆம் ஆண்டில் 81,117 இறந்தே பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது என்ற நிலையில் இதில் சுமார் 69% நகர்ப் புறங்களில் நிகழ்ந்துள்ளன.
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம், 1969-இன் கீழ் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு கட்டாயமாகும் என்பதுடன் மேலும் இத்தரவு மக்கள்தொகைத் திட்டமிடல் மற்றும் பொதுக் கொள்கைக்கு ஆதரவளிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★